## முதல்வரின் சீரிய திட்டங்களால் பால் - இறைச்சி - முட்டை உற்பத்தி அதிகரிப்பு!

# கிராம மக்களின் பொருளாதாரத்தை உயர்த்துகிறது கால்நடைத் துறை!

## சட்டப் பேரவையில் மீன்வளம் – கால்நடைத் துறை மானியக் கோரிக்கையில் அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் பதிலுரை!

**சென்னை,ஏப்.6.**

**சட்டப்பேரவையில் கால்நடை பராமரிப்புத்துறை- மீன்வளம் - மீனவர் நலத்துறை மானியக் கோரிக்கைக்கு பதிலளித்து அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் உரையாற்றுகையில், கிராம மக்களின் பொருளாதாரத்தை உயர்த்துகிறது கால்நடை துறை என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.**

**இது குறித்து கால்நடை - மீன்வளத்துறை மானியத்தில் அமைச்சர் அனிதா ஆர். ராதா கிருஷ்ணன் பதிலுரை வருமாறு:**

நவீன தமிழ்நாட்டை உருவாக்கிய சிற்பி, நமது நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கும் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களை வணங்குகிறேன். திராவிட மாடல் ஆட்சி பொறுப்பேற்ற கடந்த நான்கு ஆண்டுகளில் தமிழ்நாட்டை அனைத்து துறைகளிலும் முதன்மை மாநிலமாக உருவாக்கியும், ஏழையெளிய விளிம்பு நிலை மக்களுடைய வாழ்வாதாரத்தை உயர்த்துகின்ற வகையில், பல்வேறு மக்கள் நலத் திட்டங்களை வழங்கியும், மாநிலத்தின் உரிமைகளை யாருக்கும் விட்டு தராது, தன்னாட்சி கொள்கையில் தலைவர் கலைஞர் அவர்களின் வழிலே தமிழையும், தமிழ்நாட்டு மக்களின் உரிமையையும் பாதுகாத்தும், இந்திய ஒன்றியத்திற்கு வழிகாட்டியாக, முதல்வர்களுக்கு எல்லாம் முதல்வராக இருந்து தமிழ்நாட்டை முன்மாதிரி மாநிலமாக வழி நடத்தி வரும், முதலமைச்சர் தலைவர் தளபதி அவர்களுக்கு எனது பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எதிர்கால தமிழகத்தை சிறப்பாக வழி நடத்திட, தலைவர் அவர்களுக்கு துணை நின்று முனைப்போடு பணியாற்றிவரும் தமிழ்நாடு துணை முதலமைச்சர் எங்கள் இளைய தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் என் அன்பு வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தலைவர் தளபதி அவர்களின் வழி காட்டுதலோடு, தமிழ்நாட்டின் உரிமைக்காக நாடாளுமன்றத்தில் குரல் கொடுத்து வரும், எங்கள் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி கனிமொழி கருணாநிதி எம்.பி., அவர்களுக்கும், என்னை தொடர்ந்து ஆறுமுறை சட்டமன்ற உறுப்பினராக தேர்வு செய்து, இந்த அவைக்கு அனுப்பி வைத்த, திருச்செந்தூர் தொகுதி மக்களுக்கும், எனது நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

### ஆடுகள் கிராமப்புரத்து வங்கிகள்!

கால்நடை பராமரிப்புத் துறை முக்கியமான குறிக்கோள்களை முன்னிறுத்தி அதை அடையும் வகையில் செயல்பட்டு வருகிறது. இன்றைக்கு குறிப்பாக சொல்லவேண்டுமென்றால், கிராமப்புற த்தினுடைய பொருளாதாரத்தை உயர்த்துவது எது என்று சொன்னால் கால்நடைத் துறைதான் என்று உறுதியாக சொல்லமுடியும். சாதாரண மக்களுடைய பொருளாதாரத்தை உயர்த்துவது, கிராமத்தில் எது என்று சொன்னால், கால்நடை தான். ஏனென்றால், ஒரு சாதாரண குடும்பத்தை சேர்ந்தவர்கள் மூன்று பசு மாடுகளை வளர்த்து, அதை பராமரிப்பார்கள் என்று சொன்னால், அந்தக் குடும்பமே பல்வேறு வகையில் உயரக்கூடிய நிலைகளைப் பெறுகின்றது. பிள்ளைகளை படிக்க வைப்பது, அவர்களுடைய பொருளாதாரத்தை நிறைவேற்றுவது இதுபோன்ற நிலைகளில் பொருளாதாரத்தைத் தருகின்ற துறை கால்நடைத் துறை.

அதுபோல கிராமத்தில் இருக்கின்ற விவசாயிகள், கால்நடைகளை வளர்க்கின்ற போது, கிடா போன்று ஆடுகளை வளர்க்கின்றபோது, அது குட்டிகளைப்போட்டு, குட்டிகளைப்போட்டு, அதிகமான உற்பத்தியைப் பெருக்குகின்றது. திடீரென்று அவர்களுக்கு குடும்ப செலவிற்கு பணம் வேண்டுமென்றால், அது விடுமுறை நாட்களாக இருந்தாலும் சரி, எந்த வகையிலும் அவர்கள் உடனடியாக ஐந்து ஆடுகளை விற்று பணம் பெற முடியும். அந்தவகையில் ஆடுகளைப் பற்றி சொல்லவேண்டுமென்று சொன்னால், அது ஒரு நடமாடும் வங்கியாகவும், கிராமத்தினுடைய ஏ.டி.எம். ஆகவும் திகழ்வது எது என்று சொன்னால், இந்த கிடாக்கள்.

அதுபோல சாதாரணமாக கிராமத்தில் இருக்கின்ற எல்லோரும் அவர்களுடைய வீட்டிற்கு பின்னால் கோழி வளர்ப்பு என்பது தொடர்ந்து செய்து வருகின்றார்கள். ஐந்து கோழி என்பது பத்து கோழியாக வளர்ந்து அது முட்டையிடுவது, கோழிக் குஞ்சு உற்பத்தி செய்வது, அதுபோல முட்டைகளை விற்பனை செய்து அதன்மூலம் பயனடைவது இதுபோன்ற நிகழ்வுகள் இன்றைக்கு கிராமப் பகுதியில் செய்கின்ற நிலைகளை செய்வது என்று சொன்னால் அது கால்நடைத் துறை. இன்றைக்கு பண்ணை முறையிலும், கால்நடை வளர்ந்திருக்கிறது, கோழிப் பண்ணை முறையிலும் கால்நடை வளர்ந்திருக்கிறது. இப்படி பல்வேறு வகையிலேயும் எல்லா பொருளாதாரத்திலும் உயர்த்துவதற்கான துறையாக கால்நடைத் துறை விளங்குகிறது. அதற்கான வகையில் கிராமப் பொருளாதாரத்தை உயர்த்துவது நோயற்ற கால்நடைகள் என்ற நிலையை உருவாக்குவது, உள்ளூர் இனப்பசுக்கள் மற்றும் எருமைகளின் தரத்தை உயர்த்துவது, பசுந்தீவன மேம்பாட்டிற்கென திட்டங்களை செயல்படுத்துவது, செலவை குறைத்து கால்நடை பொருட்களின் உற்பத்தியை அதிகரிப்பது, உள்நாட்டின கால்நடைகளை அவற்றின் வாழ்விடங்களில் பாதுகாத்து எண்ணிக்கையை பெருக்குவது, கால்நடை வளர்ப்போருக்கு பல்வேறு விழிப்புணர்வு, பயிற்சிகள், ஆலோசனைகள் வழங்குவது போன்ற முக்கிய குறிக்கோள்களை அடையும் வகையில் பல திட்டங்களை செயல்படுத்த முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

தமிழ்நாட்டில் 3 ஆயிரத்து 869 கால்நடை நிலையங்கள், கிளை நிலையங்கள் மற்றும் நடமாடும் கால்நடை மருத்துவ ஊர்திகள்மூலம் செயற்கை முறை கருவூட்டல் பணிகள் சிறப்பாக நடைபெற்று வருகிறது. 2024-25 ஆம் ஆண்டில் 50 இலட்சத்து 96 ஆயிரம் கருவூட்டல்கள் மேற்கொள்ளப்பட்டு, அதன் காரணமாக கன்றுகள் பிறப்பும் அதிகரித்துள்ளது. கிடேரிக் கன்றுகள் மட்டுமே பிறக்கும் வகையில் பாலினம் பிரிக்கப்பட்ட உறைவிந்து உற்பத்தி ஆய்வகம் ஊட்டி மாவட்ட கால்நடைப் பண்ணையில் 2024 மார்ச் மாதம் முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டு, கடந்த மாதம் வரை 1,872 கிடேரிக்கன்றுகள் பிறந்துள்ளன என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல, கருமாற்று தொழில்நுட்பம் மற்றும் செயற்கை கருத்தரித்தல் ஆகிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி பொலி காளைகள் உற்பத்தியில் தமிழ்நாடு கால்நடை பராமரிப்புத் துறை இந்திய அளவில் மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டியாகவும், முன்னோடியாகவும் விளங்கி வருகின்றது என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

கால்நடை பொருட்கள் உற்பத்திச் செலவைக் குறைத்து வருமானத்தைப் பெருக்கும் நோக்கத்துடன் பசுந்தீவன உற்பத்தியைப் பெருக்கும் திட்டங்களைச் செயல்படுத்த முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். திருவள்ளூர், திருவண்ணாமலை, விழுப்புரம், சேலம், கடலூர் ஆகிய மாவட்டங்களில் 25 ஏக்கர் மேய்க்கால் நிலங்களில் சுய உதவிக் குழுக்கள்மூலம் பசுந்தீவனம் உற்பத்திச் செய்யும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. விவசாயிகளின் பழத்தோட்டங்களில் ஊடுபயிராக பசுந்தீவன சாகுபடிக்கு ஏக்கருக்கு ரூ.3,000/- மானியத்தில் 9 ஆயிரம் ஏக்கரில் தீவன சாகுபடி மேற்கொள்ளப்படுகிறது.

கால்நடை வளர்ப்போர் தங்கள் சொந்த நிலங்களில் பசுந்தீவன உற்பத்தியை மேற்கொள்ளும் விதமாக மானாவாரி நிலங்களில் சுமார் 10,000 ஏக்கரிலும், பாசன வசதியுள்ள 4,000 ஏக்கரிலும் அதிக மகசூல்தரும் பசுந்தீவன விதைகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. சிவகங்கை மாவட்டம், செட்டிநாடு மாவட்ட கால்நடைப் பண்ணையில் 100 ஏக்கரில் பசுந்தீவனம் உற்பத்தித் திட்டம் செயல்படுத்தப்படுகின்றது. அரும்பாடுபட்டு உற்பத்தி செய்யப்பட்ட பசுந்தீவனம் விரயமாகாமல் தடுக்கும் வகையில் கடந்த இரண்டாண்டுகளில் 6,000 விவசாயிகளுக்கு புல் நறுக்கும் கருவிகள் 50% மானியத்தில் வழங்கப்படுகின்றன.

### கால்நடை மருத்துவ ஊர்திகள்!

அரசு வழங்கும் சேவைகள் அனைத்து கிராம ஊராட்சிகளுக்கும், குக்கிராமங்களுக்கும் சென்று சேரும் விதமாக கடந்த ஆகஸ்ட் மாதம் முதல் 245 நடமாடும் கால்நடை மருத்துவ ஊர்திகள்மூலம் ஒரு நாளைக்கு இரண்டு கிராம ஊராட்சிகளில் சேவைகள் வழங்கப்படுகின்றன.

நடப்பாண்டில், பிப்ரவரி மாதம் முடிய 49 ஆயிரத்து 512 கிராம முகாம்கள்மூலம் சுமார் 9 இலட்சம் கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். நோய்களை உடனடியாகக் கண்டறிய 50 ஸ்கேன் கருவிகள், 50 கதிரியக்கக் கருவிகள் ஆகியவற்றை வழங்கிட முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டதைத் தொடர்ந்து, அவற்றை கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கால்நடைகளைத் தாக்கிப் பேரிழப்பினை ஏற்படுத்தும் தொற்று நோய்களுக்கும், கோழிகளைத் தாக்கும் கோழிக் கழிச்சல் நோய்க்கும், நாய்கள்மூலம் பரவும் வெறி நோய்க்கும் தடுப்பூசிகள் கால்நடை நிலையங்களில் போடப்படுகின்றன. இதன் பயனாக 2021-2022 ஆம் ஆண்டில் மொத்தம் 41 நோய்க் கிளர்ச்சிகள் ஏற்பட்ட நிலையில், 2024-2025 ஆம் ஆண்டில் 25 நோய்க்கிளர்ச்சிகளாகக் குறைந்து, பொருளாதார இழப்புகள் கணிசமாகக் குறைக்கப்பட்டுள்ளன.

கால்நடை பராமரிப்புத் துறையின் சேவைகளை தொலைதூர கிராமங்களில் உள்ள விவசாயிகளின் இருப்பிடங்களுக்கே சென்று வழங்கும் கால்நடை பாதுகாப்புத் திட்ட முகாம்களை 18-1-2000 அன்று முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் அறிமுகப்படுத்தினார்கள். இத்திட்டத்தை மேலும் பரவலாக்கும் விதமாக மருத்துவ சேவைகளுடன் கால்நடைப் பொருட்கள் உற்பத்தி நடைமுறைகள், நோய்த் தடுப்பு முறைகள், கால்நடை பொருட்கள் சந்தைப்படுத்துதல் மற்றும் மதிப்புக் கூட்டுதல் போன்ற நுணுக்கங்கள் குறித்த விழிப்புணர்வுகளை ஏற்படுத்தும் விதமாக மாநிலம் முழுவதிலும் 2021-2022 ஆம் ஆண்டு முதல் வருடத்திற்கு 7,760 கால்நடை சுகாதாரம் மற்றும் விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. கடந்த



2023-2024 ஆம் ஆண்டு வரை 23 ஆயிரத்து 280 முகாம்கள் நடத்தப்பட்டு, சுமார் 2 கோடியே 40 இலட்சம் கால்நடைகள் பயனடைந்துள்ளன.

### கோழி வளர்ப்பு - கோடி இலாபம்!

கோழி வளர்த்து கோடி இலாபம் பெறமுடியும் என்ற எண்ணத்தை மக்களிடம் ஏற்படுத்திய பண்ணை முறை கோழி வளர்ப்புத் தொழில் தமிழ்நாடு அரசால் தொடர்ந்து ஊக்குவிக்கப்படுகிறது. இம்முறையில் அதிக எண்ணிக்கையில் தொழில் முனைவோர் உருவாக்கப்பட்டுள்ளனர். இன்றளவும் இத்தொழில் பலருக்கு வேலைவாய்ப்பினை வழங்கி வருகிறது. நாட்டுக்கோழி வளர்ப்பினை ஊக்குவிப்பதற்காகப் பல்வேறு திட்டங்களைத் தந்திருக்கிறார்கள். இன்றைக்கு குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றுச் சொன்னால், பலர் கோழிக்கறி உண்பார்கள், ஆனால், அசைவ ஹோட்டலுக்கு சென்றால், அங்கே சென்று அசைவ பிரியர்கள் கேட்கும் போது நாட்டுக் கோழி இருக்கிறதா, நாட்டு முட்டை இருக்கிறதா என்ற கேள்வியைக் கேட்பார்கள். அதையெல்லாம் தீர்க்கின்ற வகையிலே நாட்டுக் கோழி வளர்ப்பினை ஊக்குவிக்க ஓசூர், திருநெல்வேலி மற்றும் சிவகங்கை ஆகிய மாவட்டங்களில் உள்ள மாவட்ட கால்நடைப் பண்ணைகளில் வருடத்திற்கு சுமார் 10 முதல் 12 இலட்சம் கோழிக் குஞ்சுகள் உற்பத்தி செய்யும் பொருட்டு, குஞ்சு பொரிப்பகத்துடன்கூடிய நாட்டுக் கோழிப் பண்ணைகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

## ஆடுகள் நடமாடும் வங்கிகளே – கிராமத்தின் ஏ.டி.எம்.ஆகவும் திகழ்கிறது!

## 5000 சினையுற்ற கறவை பசுக்களுக்கு ஊட்டச் சத்து வழங்கும் திட்டம்!

பண்ணை முறையில் நாட்டுக்கோழிகள் வளர்ப்புத் திட்டம் 50 சதவிகித மானியத்துடன் கடந்த 3 வருடங்களில் மொத்தம் 300 பயனாளிகளை தொழில்முனைவோராக மாற்றியுள்ளது. ஏழை எளிய மக்களுக்கு வாழ்வாதாரம் வழங்கும் விதமாக, 2024-2025 ஆம் ஆண்டில் கிராமப்புறங்களில் 38 ஆயிரத்து 700 பயனாளிகளுக்கு நான்கு வார வயதுடைய நாட்டுக்கோழிக் குஞ்சுகள் தலா 40 எண்ணிக்கையில் 50 சதவிகித மானியத்தில் வழங்கப்படுகின்றன. இதன்மூலம் அவர்களுக்குத் தொடர்ச்சியான உபரி வருமானம் ஈட்டுவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு பல்வகை பல்லுயிர்களின் இருப்பிடமாக இருந்து வருகிறது. உள்நாட்டின வகை கால்நடை மற்றும் கோழியினங்கள் தமிழ்நாட்டில் காணப்படுகின்றன. சிறந்த பண்புகள் கொண்ட நாட்டினங்களை அழிவிலிருந்து காப்பது நம் அனைவரின் கடமை. இன்னும் சொல்வதென்றால், தமிழர்களின் பாரம்பரியமான ஜல்லிக்கட்டு நிகழ்ச்சிகள் நடத்தப்படுவதால் நாட்டின காளைகள் அழிவிலிருந்து காப்பாற்றப்படுகின்றன. உள்நாட்டு நாயினங்களான கோம்பை, ராஜபாளையம், சிப்பிப்பாறை, கன்னி ஆகியவை இராணுவத்திற்கும் பயன்படுத்தப்படுகின்றன. இன்றைக்கு வேட்டைகள் எல்லாம் தடை செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், கடந்த காலங்களிலே வேட்டையாடுவதற்கு என்று சொன்னால் நம்முடைய நாட்டினங்களாக இருக்கின்ற இந்த சிப்பி, கன்னிப்பாறை, ராஜபாளையம், கோம்பை போன்ற நாய்கள் கடுமையான வேட்டையாடுகின்ற நிலைகளில் இருந்தது. ஆனால், இன்றைக்கு வேட்டைகள் தடைசெய்யப்பட்டிருக்கின்றது. நாங்கள் கூட சிறு வயதில் இரண்டு நாய்களை கூட்டிக்கொண்டு காட்டில் முயல்களை வேட்டையாடுவதற்காக போவோம். அங்கே, முயலைத் துறத்தி நாய் பிடிக்கும், அப்போது வேட்டை தடைசெய்யப்படவில்லை. இப்போது வேட்டை தடைசெய்யப்பட்டிருக்கின்றது. ஆனால், இன்றைக்கு அத்தனை நாய்களும் வீடுகளைக் காக்கின்ற நாய்களாக, நாட்டைக் காக்கின்ற நாய்களாக இருக்கின்றன. இன்றைக்கு அந்த நாய் இனங்களை பாதுகாக்க வேண்டும் என்ற வகையிலே, முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி உள்நாட்டின கால்நடைகள் மற்றும் நாயினங்களை பாதுகாக்க ஆராய்ச்சி நிலையங்கள் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைகழகத்தின்மூலம் அமைக்கப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி)

தென்காசி மாவட்டம், பாவூர்சத்திரத்தில் நாட்டின நாய்களின் இனப்பாதுகாப்பு மற்றும் ஆராய்ச்சி மையமும், கரூர் மாவட்டத்தில் புழக்கடைக் கோழியின ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மையமும், செங்கல்பட்டு மாவட்டம், காட்டுப்பாக்கத்தில் உள்ள கால்நடை அறிவியல் முதுகலை ஆராய்ச்சி நிலையத்தில் நாட்டுக்குட்டை மாட்டினத்திற்கான பாதுகாப்பு மையமும், தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் உம்பளாச்சேரி மாட்டினத்தைப் பாதுகாக்கும் திட்டமும், தென்காசி மாவட்டம், சின்ன கோவிலாங்குளத்தில் வெள்ளாட்டின ஆராய்ச்சி மையம் ஆகிய ஆராய்ச்சி மையங்கள் நிறுவப்பட்டு வருகிறது. சேலம் மாவட்டம், மேச்சேரி, பள்ளிப்பட்டி ஊராட்சியில் மேச்சேரி செம்மறி ஆட்டின பாதுகாப்பிற்காக, "செம்மறி ஆடுகளுக்கான பிரத்யேகமான திரவ விந்து உற்பத்தி நிலையம்" செயலாக்கத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

### பண்ணை முறை கோழி வளர்ப்பு!

பண்ணைமுறை கோழி வளர்ப்புத் தொழிலானது அதிக இலாபம் தரும் தொழிலாக உருவெடுத்ததைத் தொடர்ந்து, தீவனம் மற்றும் தீவனவிதைகள் உற்பத்தி, ஆடுகள் இனப்பெருக்கப் பண்ணைகள், பன்றி வளர்ப்பு, இதுபோன்ற தொழில்கள் பண்ணை முறையில் மேற்கொள்ள ஊக்குவிக்கப்படுகின்றன. இதற்கான விண்ணப்பங்கள் துறைமூலம் பரிசீலிக்கப்பட்டு, கூராய்வு செய்யப்பட்டு, வங்கி கடன் வழங்கப்படுகின்றன. இந்தக் கடன்களுக்கு

50 சதவிகிதம் பின்மானியம் வழங்கப்படுகின்றது. (மணியடிக்கப்பெற்றது)

இத்திட்டத்தின்மூலம் 142 தொழில்முனைவோர்கள் உருவாக்கப்பட்டுள்ளனர். மொத்தம் 93 கோடியே 17 இலட்சம் ரூபாய் முதலீடுள்ள இத்திட்டங்களுக்கு 40 கோடியே 66 இலட்சம் ரூபாய் மானியம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

கால்நடை வளர்க்கும் பெரும்பாலான ஏழை எளிய மக்கள் தங்களுடைய அன்றாட தேவைகளுக்காக, தனியாரிடம் அதிக வட்டி விகிதத்தில் கடன் பெற்று துன்பப்படும் நிலைகளைக் களையும்விதமாக அவர்களுக்கு வங்கிகள்மூலம் கடனுதவி பெறுவதாக கடன் அட்டை வழங்கப்படுகிறது. கடந்த 2024-2025 ஆம் ஆண்டில், 7 இலட்சத்து 76 ஆயிரத்து 647 கடன் அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

"வாடிய பயிரை கண்ட போதெல்லாம் வாடினேன்" என்ற வள்ளலாரின் 200-வது பிறந்த நாள் ஆண்டை முன்னிட்டு, துவக்கப்பட்ட "வள்ளலார் பல்லுயிர் காப்பகங்கள்" திட்டம்மூலம் தெருக்களில் சுற்றித் திரியும் ஆதரவற்ற விலங்குகளுக்கு உணவு, உறைவிடம் மற்றும் மருத்துவ உதவி வழங்கிடும் தொண்டு நிறுவனங்கள், அரசுசாரா நிறுவனங்களுக்கு தெரு நாய்களின் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்தி வெறிநோய் தடுப்பூசி செலுத்தும் பணிகளுக்கு தற்போது வரை 11 கோடியே 29 இலட்சம் ரூபாய் அரசால் வழங்கப்பட்டுள்ளது. மேலும், 4 இலட்சத்து 60 ஆயிரம் வெறிநோய் தடுப்பூசி மருந்துகள் கொள்முதல் செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

சேலம் மாவட்டம், தலைவாசல், கூட்டு ரோட்டில் கால்நடை மற்றும் விலங்கின அறிவியலுக்கான ஒருங்கிணைந்த உயர் ஆராய்ச்சி நிலையம் கடந்த 13-1-2025 அன்று முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்த நிலையத்தில் இயக்குநர்கள், பேராசிரியர்கள், கால்நடை மருத்துவர்கள், கணக்கு அலுவலர்கள், வேளாண்மை அலுவலர்கள், பண்ணை மேலாளர், மீன்வள உதவியாளர்கள், அமைச்சு பணியாளர்கள், கால்நடை பராமரிப்பு உதவியாளர்கள், காவலாளிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேலும், 87 திறன்சார் மற்றும் திறன்சாரா பணியாளர்களை பணியமர்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. முதற்கட்டமாக கால்நடைப் பண்ணை பிரிவில், 129 நாட்டின மாடுகளும், 902 செம்மறி ஆடுகளும், 550 வெள்ளாடுகளும், 10 பன்றிகளும் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன. இந்நிலையத்தில் பராமரிக்கப்படும் கால்நடைகளுக்கு பசுந்தீவனம் 34 ஏக்கரில் உற்பத்தி செய்யப்படுகிறது. இந்நிலையத்தில் உற்பத்தியாகும் பால், ஆவின் நிறுவனத்தின்மூலம் சந்தைப்படுத்தப்படுகிறது. தீவிர மீன் வளர்ப்புப் பிரிவு மூலமாக மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டு பண்ணையாளர்களுக்கு வழங்கப்படுவதுடன், செயல் விளக்கப் பயிற்சியும் அளிக்கப்படுகிறது. இந்நிலையம் திறக்கப்பட்ட பின், 300-க்கும் மேற்பட்ட வேளாண் கல்லூரி மாணவர்கள், ATMA திட்ட பண்ணையாளர்கள் மற்றும் விவசாய பண்ணையாளர்களுக்கு ஒரு நாள் பயிற்சி மற்றும் நேரடி விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

### மாணவர்களுக்கு பயிற்சி!

வரும் ஆண்டுகளில் கால்நடை வளர்ப்போர், பண்ணையாளர்கள், தொழில்முனைவோர், கால்நடை மருத்துவ அறிவியல் மற்றும் உணவு தொழில்நுட்ப பிரிவுகளில் பயிலும் மாணவர்கள் ஆகியோர் பயன்பெறும் வகையில் சிறப்பு பயிற்சி வகுப்புகள் நடத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம், அகில இந்திய தொழில்நுட்பக் குழு ஆகியவற்றின் ஒப்புதல் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அகில இந்திய அளவில் சிறந்த பல்கலைக்கழகங்கள் மற்றும் வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுடன் இணைந்து ஆராய்ச்சிகள் மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையத்தில் அமைந்துள்ள பொதுமக்கள் கலந்துரையாடல் பிரிவில் ஆவின் பாலகம் துவக்கப்பட்டுள்ளது. இதே பகுதியில் வங்கி ஒன்றைத் துவக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்நிலையத்தில் அமைக்கப்பட்டிருக்கும் நாட்டு கோழியின பிரிவு, குஞ்சு பொரிப்பகம், தீவன ஆலை, இறைச்சி பதப்படுத்துதல் பிரிவு ஆகியவை பொது-தனியார் கூட்டாண்மை முறையில் செயல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

நூற்றாண்டுகளையும் தாண்டி கால்நடைகளின் நலன் பேணும் கால்நடைப் பராமரிப்புத் துறையின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

இதைத்தொடர்ந்து துறையின் உட்கட்டமைப்பை மேம்படுத்தும் விதமாகக் கடந்த 4 ஆண்டுகளில் 155 கால்நடை நிலையங்கள் புதிதாகக் கட்டுவதற்கு 110 கோடியே 46 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அவற்றில் 137 கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இதர கட்டடங்களுக்கான கட்டுமானப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

முதலமைச்சர் அவர்களின் சீரிய சிறப்பு திட்டங்களை செயல்படுத்தியதன் பயனாக பால், இறைச்சி, முட்டை உற்பத்தி அதிகரித்துள்ளது. இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகத்தின் பரிந்துரைப்படி தனிமனிதனின் ஒரு நாளைய தேவையான 300 கிராம் பால் என்ற சராசரி நிலையை தாண்டி 384 கிராம் என்ற அளவிலும், ஆண்டுக்கு 180 முட்டைகள் தேவை என்ற நிலையில் 290 என்ற அளவிலும் உயர்ந்து நிற்பது நமது முதலமைச்சர் அவர்களுடைய ஆக்கபூர்வமான திட்டங்களுமே காரணம் என்று தெரிவித்துக்கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

ஒரு ஹெக்டேருக்கும் குறைவான நிலமுள்ள குறு, சிறு விவசாயிகள் ஈட்டும் வருமானத்தில், சுமார் 25 சதவிகிதம் வரை கால்நடைகளின் மூலமே பெறப்படுவதாக தேசிய புள்ளிவிவர கணக்கு அலுவலகம் தெரிவிக்கிறது. பெண்கள், குறு, சிறு மற்றும் நிலமற்ற ஏழை விவசாயிகளின் பொருளாதார முன்னேற்றத்தினை, கால்நடை பராமரிப்புத் தொழில்மூலம் மேம்படுத்துவது முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசால் முக்கியமாக கருதப்படுகிறது. (மணியடிக்கப் பெற்றது)

இந்த முக்கியத்துவத்திற்கு செயல் வடிவம் வழங்கி, கால்நடை வளர்ப்புத் தொழிலை நம்பி வாழும் மக்களின் பொருளாதாரத்தை உயர்த்த எனது உரையில் குறிப்பிட்டவற்றைத் தவிர, மேலும் பல ஆக்கபூர்வமான திட்டங்களை முதலமைச்சர் அவர்கள் வழங்கியுள்ளார்கள்.

சாதி மத மனமாச்சரியங்களைப் புறந்தள்ளி, சமத்துவமே எங்கள் கொள்கை என முழங்கி, சாமானியரின் வாழ்வில் விளக்கை ஏற்றி, எல்லோருக்கும் எல்லாம் என்று பறை சாற்றி, ஏழை எளியவர்களின் உற்ற தோழனாக, ஏற்றமிகு தமிழ்நாட்டை கட்டமைக்கும் எங்கள் தலைவர் முதலமைச்சர் அவர்களை வணங்கி, முதலமைச்சர் அவர்களின் அனுமதியுடன் 2025-2026 ஆம் ஆண்டிற்கான புதிய அறிவிப்புகளை அறிவிக்கிறேன்.

### அறிவிப்புகள்

**கால்நடை பராமரிப்புத் துறை**

1. முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தின்கீழ் தெரிவு செய்யப்பட்ட ஊராட்சி ஒன்றியங்களில் ஊரக ஏழை கால்நடை விவசாயிகளின் 5,000 சினையுற்ற கறவை பசுக்களுக்கு 6.65 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் 50% மானியத்துடன் "ஊட்டச் சத்து வழங்கும் திட்டம்" செயல்படுத்தப்படும்

2. பசுந்தீவன உற்பத்தியை ஊக்குவிக்கும் விதமாக விருதுநகர், சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் "மேய்க்கால் நில மேம்பாட்டுத் திட்டம்" 1.62 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும்

3. மிகவும் பழுதடைந்துள்ள கால்நடை மருத்துவமனைகள் மற்றும் கால்நடை பன்முக மருத்துவமனைகள் 15 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் புதிதாக கட்டப்படும்

4. ஒருங்கிணைந்த சுகாதார திட்டத்தின்கீழ் 200 கால்நடை மருத்துவர்களுக்கு 20 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்கப்படும்.

5. தீவன உற்பத்தி தொழில்நுட்பங்கள், மேம்பட்ட தீவன உற்பத்தி, சேமிப்பு மற்றும் பயன்பாட்டு தொழில்நுட்பங்கள் குறித்து தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் 30 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் கால்நடை பராமரிப்புத் துறை அலுவலர்களுக்கு பயிற்சி அளிக்கப்படும்

6. தற்போது இயங்கிக்கொண்டிருக்கும் அடையாறு செல்லப்பிராணிகள் சிகிச்சை மையம் நவீன தொழில்நுட்பங்களுடன்கூடிய தனித்துவம்வாய்ந்த சிகிச்சை மையமாக 5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் தரம் உயர்த்தப்படும்

7. தஞ்சாவூர் மாவட்டம், ஈச்சங்கோட்டையில் உள்ள அயலின கால்நடை பெருக்குப் பண்ணை மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூரில் உள்ள மாவட்ட கால்நடை பண்ணைகளில் செயல்பட்டு வரும் உறைவிந்து உற்பத்தி நிலையங்கள் 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் வலுப்படுத்தப்படும்

8. கால்நடை நிலையங்கள் மற்றும் கிளை நிலையங்களுக்கு செயற்கை முறை கருவூட்டல் பணிக்கு தேவையான பொருட்கள் 3.65 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் வழங்கப்படும்

9. செயற்கை முறை கருவூட்டல் பணிகள் தங்குதடையின்றி நடைபெறுவதை உறுதி செய்யும் விதமாக கால்நடை பெருக்கம் மற்றும் தீவன அபிவிருத்தி அலகுகளில் உறைவிந்து சேமிப்பு மற்றும் விநியோகத்திற்குத் தளவாடப் பொருட்கள் கொள்முதல் மற்றும் உள்கட்டமைப்பு பணிகள் 13.19 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ளப்படும்

10. கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர், மாவட்ட கால்நடைப் பண்ணையில் செயல்படும் ஆய்வு கூட கருத்தரித்தல் அலகு 4.50 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் மேம்படுத்தப்படும்

11. ஏழை எளிய மக்களின் உடனடி நிதித் தேவையை பூர்த்தி செய்யும் ஆட்டினங்களின் உற்பத்தி மற்றும் இனப்பெருக்கத்தை மேலும் மேம்படுத்திட "தமிழ்நாடு மாநில வெள்ளாடு/செம்மறி ஆடு உற்பத்தி மற்றும் இனப்பெருக்கக் கொள்கை" உருவாக்கப்படும்

12. பாதுகாப்பான செல்லப்பிராணி வளர்ப்பு மற்றும் மனிதாபிமானத்துடன் பிராணிகளை நடத்துதல் ஆகியன குறித்து பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த ஏதுவாக சென்னை மற்றும் கோயம்புத்தூரில் தனியார் பங்களிப்புடன் "செல்லப்பிராணி பூங்கா" 5 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்

13. துறையில் உள்ள கால்நடைப் பண்ணைகளில் பசுந்தீவன உற்பத்தி மேற்கொள்ளப்பட்டு, நவீன தீவன வங்கித் திட்டம் 2 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

14. ஆதரவற்ற, கைவிடப்பட்ட, மீட்கப்பட்ட மற்றும் விபத்துகளில் காயமுற்ற கால்நடைகளை பேணிப்பாதுகாக்கும் விதமாக பராமரிப்பு நிலையங்கள், வள்ளலார் பல்லுயிர் காப்பகங்கள் திட்டம்மூலம் 5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் தோற்றுவிக்கப்படும்

15. தெருக்களில் சுற்றித்திரியும் மற்றும் ஆதரவற்ற தெரு நாய்களின் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்தும் பணி தனியார் பங்களிப்புடன், பிராணிகள் நல வாரியம்மூலம் 20 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் விரிவுபடுத்தப்படும்

16. உறைவிந்து உற்பத்தி நிலையங்களுக்கு உயர் மரபுத்திறன் கொண்ட காளைகள், ஆய்வுக்கூட கருத்தரித்தல் திட்டத்திற்கு உயர் மரபுத்தன்மையுடைய பசுக்கள் மற்றும் இதர பண்ணைகளுக்கு கால்நடைகள் கொள்முதல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்துதல் ஆகியன 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ளப்படும்

17. தெருநாய்களுக்கும் கால்நடைகளுக்கும் இடையிலான மோதல் மற்றும் தெரு நாய்கள் உட்பட கால்நடைகளுக்கும் மனிதர்களுக்கும் இடையிலான மோதல் ஆகியவற்றைக் கையாளும் வழிமுறைகளுடன் "ஆதரவற்ற மற்றும் கைவிடப்பட்ட கால்நடைகளுக்கான கொள்கை" உருவாக்கப்படும்

18. கால்நடை வளர்ப்புத் தொழிலில் தொழில் முனைவோரை உருவாக்கவும் கால்நடை வளர்ப்பினை வணிகமயமாக்க உதவும் வகையிலும், "கால்நடை வளர்ப்பு தொழில் முனைவோருக்கான ஆலோசனை மையம்" 50 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் ஏற்படுத்தப்படும்

19. மாவட்டந்தோறும் "ஒருங்கிணைந்த கால்நடை பண்ணைத்திட்டம்" தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமைமூலம் செயல்படுத்தப்படும். இதன்மூலம் தரமான கால்நடைகள் மற்றும் தீவனங்கள் நியாயமான விலையில் விவசாயிகளுக்கு வழங்குவது உறுதி செய்யப்படும்

20. 100 கால்நடை விவசாயிகள் கால்நடை வளர்ப்பு குறித்த பல்வேறு நடைமுறைகளை தெரிந்துகொள்ளும் வகையில் கால்நடை பொருட்கள் உற்பத்தியில் சிறந்து விளங்கும் பிற மாநிலங்கள்/வெளிநாடுகளுக்கு விழிப்புணர்வு பயணம் (Exposure visit) மேற்கொள்ள 1 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் ஏற்பாடு செய்யப்படும்

21. கால்நடைகளை சிறந்த முறையில் பராமரிக்கும் விவசாயிகளை கண்டறிந்து,

தொடர்ச்சி 14 ஆம் பக்கம்